சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – 2021–2022–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பு – புகழ்பெற்ற தலைவர்கள், தமிழறிஞர்கள் ஆகியோரின் அரிய ஒலி / ஒளிப் பொழிவுகள் இணையதளத்தில் அனைவரும் அணுகும் வகையில் ஆவணமாக்கப்படுதல் – 2021–2022–ஆம் நிதியாண்டிற்கு ரூ.10,40,000/– (ரூபாய் பத்து இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தவ2–2)த் துறை

அரசாணை (நிலை) எண்.169

நாள் 29.11.2021
பிலவ, கார்த்திகை – 13
திருவள்ளுவர் ஆண்டு – 2052

படிக்க:–

1. 2021–2022–ஆம் ஆண்டுக்கான சட்டமன்றப் பேரவை அறிவிப்பு எண்.9.
2. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித ந.க.எண். 8369/ஆ.மொ.2/2021, நாள் 20.09.2021 மற்றும் 12.10.2021.
3. தமிழ் இணையக் கல்விக் கழக இயக்குநரின் கடித எண்.1509684/மி.நூ/2021, நாள் 11.10.2021.

========

ஆணை:–

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 31.8.2021 அன்று நடைபெற்ற தமிழ் வளர்ச்சித் துறையின் 2021–2022–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை எண்.46–இல், மாண்புமிகு அமைச்சர் (தொழில் துறை) அவர்களால் கீழ்க்காணும் அறிவிப்பு வெளியிடப்பட்டது :–

> "புகழ்பெற்ற தலைவர்கள், தமிழறிஞர்கள் ஆகியோரின் அரிய ஒலி / ஒளிப் பொழிவுகள் சேகரிக்கப்பட்டுத் தொகுக்கப்பட்டு இணையத்தில் அனைவரும் அணுகும் வகையில் ஆவணமாக்கப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய்.25.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்"

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட தமிழ் வளர்ச்சி இயக்குநரது கடிதங்களில், பெரியார், அண்ணா, காமராசர், கலைஞர், வ.உ.சி, பாரதியார், பாரதிதாசன் போன்ற பெருந்தலைவர்களின் சொற்பொழிவுகள், இலக்கிய சொற்பொழிவுகள் ஒளிப்படக்காட்சிகள் ஆவணமாக்கப்படலாம் என்றும், இப்பணி தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் வாயிலாக செயல்படுத்தப்பெறலாம் என்றும், மேலும் ஆவணப்படுத்தப்பட்டு தொகுக்கப்பெறும் சொற்பொழிவுகள், இலக்கிய சொற்பொழிவுகள், ஒளிப்படக்காட்சிகள் அனைவரும் பார்வையிடும் வகையில் இணையக் கல்விக்கழகம் மற்றும் தமிழ் வளர்ச்சி இயக்கக இணையதளங்களில் பதிவிறக்கம் செய்தும் பயன்படுத்திடும் வகையில்

ஆணையிடப்பெறலாம் என்றும், இப்பணியினை மேற்கொள்ள ஆண்டு தோறும் ரூ.25.00 இலட்சம் தமிழ் இணையக் கல்விக்கழகத்திற்கு தமிழ் வளர்ச்சி இயக்குநர் பெற்று வழங்கும் வகையில் ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பெறலாம் என்றும், மேலும் தொடர்ந்து ஒலி / ஒளி ஆவணமாக்கப்பட வேண்டிய தலைவர்களின் பெயர்ப்பட்டியலை தமிழ் வளர்ச்சி இயக்குநரிடமிருந்து பெற்று அதனடிப்படையில் தயாரிக்கும் வகையிலும் ஆணையிடப்பெறலாம் என்றும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. மேலும் இப்பணியினை உரிய விதிமுறைகளின்படி விலைப்புள்ளிகளைப் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், கருத்துருவினை உரியவாறு செயல்படுத்த அரசுநிலையில் கருதிப்பார்த்து உரிய ஆணைபிறப்பிக்க ஆவனசெய்யுமாறும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் அரசைக் கோரியுள்ளார். மேலும் அவ்வகையில் இத்திட்டத்தை செயற்படுத்தும் பொருட்டு அதன் திட்ட மதிப்பீடு தமிழ் இணையக் கல்வி கழகத்தால் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:–

| வ. எண். | செயல்பாடுகள் | செலவினம் (ரூ.) |
|---|---|---|
| 1. | செயல் 1 : புகழ்பெற்ற தலைவர்கள், தமிழறிஞர்களின் அரிய ஒலி / ஒளிப் பொழிவுகள் சேகரித்தல் / கொள்முதல் செய்தல் | 5,00,000 |
| 2. | செயல் 2 : ஒளி–ஒலி ஆவணங்களை மின் வடிவிற்கு மாற்றுதல்<br>செயல் 3 : கோப்புகளை தொகுப்புகளாக வடிவமைத்தல் (audio / video editing)<br>செயல் 4 : தரத்தினை உறுதி செய்தல் மற்றும் மீத்தரவு தயாரித்தல்<br>செயல் 5: ஆவண அடைவு மற்றும் இணை வழிப்படுத்துதல்<br>செயல் 6 : மின்நூலக இணையதளத்தினை பொழிவுகளை பதிவேற்றும் வகையில் மேம்படுத்துதல் (website upgrading) | 17,50,000 |
| 3. | இதர பிற வன்பொருள் மற்றும் மென்பொருள் செலவினங்கள் (Software and Hardware Charges) | 1,50,000 |
| 4. | இதர பிற செலவினங்கள் (எழுதுபொருட்கள், அறைகலன்கள், கூட்டம், போக்குவரத்து உள்ளிட்ட பிற) | 1,00,000 |
| | **மொத்தம்** | **25,00,000** |

(ரூபாய் இருபத்தைந்து இலட்சம் மட்டும்)

4. அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர், தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவின் அடிப்படையில், புகழ்பெற்ற தலைவர்கள், தமிழறிஞர்கள் ஆகியோரின் அரிய ஒலி / ஒளிப் பொழிவுகளை இணையத்தில் அனைவரும் அணுகும் வகையில் ஆவணமாக்குதல் தொடர்பாக கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது:–

i). தமிழ் இணையக் கல்விக்கழகம் மூலம், புகழ்பெற்ற தலைவர்கள், தமிழறிஞர்கள் ஆகியோரின் சொற்பொழிவுகள், இலக்கிய சொற்பொழிவுகளின் ஒளிப்படக்காட்சிகள் தமிழ் இணையக் கல்விக்கழகம் வாயிலாக ஆவணப்படுத்த அனுமதி அளிக்கப்படுகிறது.

ii). தொகுக்கப்பெறும் சொற்பொழிவுகளை தமிழ் இணையக் கல்விக்கழகம் மற்றும் தமிழ் வளர்ச்சி இயக்கக இணையதளங்களில் பதிவிறக்கம் செய்து பயன்படுத்தும் வகையில் பதிவேற்றம் செய்வதற்கு தமிழ் இணையக் கல்விக் கழகத்திற்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

iii). ஒலி / ஒளி ஆவணமாக்கப்பட வேண்டிய தலைவர்களின் பெயர்ப்பட்டியலை தமிழ் வளர்ச்சி இயக்குநரிடமிருந்து பெற்று அதனடிப்படையில் ஆவணப்படுத்துமாறு தமிழ் இணையக் கல்விக் கழகத்திற்குத் தெரிவிக்கப்படுகிறது.

iv). இத்திட்டம் மூன்றாண்டுகள் வரை மட்டும் அனுமதிக்கப்படுகிறது,

v). ஒளிவுமறைவற்ற ஒப்பந்த புள்ளிகள் சட்டம் 1998–இன் கீழ் உரிய விதிமுறைகளின்படி விலைப்புள்ளிகளைப் பெற்று இப்பணியினை நிறைவேற்ற வேண்டுமென தமிழ் இணையக் கல்விக் கழகத்திற்கு அறிவுறுத்தப்படுகிறது.

vi). நடப்பு நிதியாண்டில் (2021–2022) ஐந்து மாதங்களே எஞ்சியுள்ள நிலையில் மேலே பத்தி 3–ல் அட்டவணையில் தெரிவிக்கப்பட்ட பணிகளை 2021–2022–ஆம் நிதியாண்டில் மேற்கொள்ள ரூ.10,40,000/–க்கு (ரூபாய் பத்து இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

vii). 2022–2023–ஆம் நிதியாண்டிற்கு வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.25,00,000/– (ரூபாய் இருபத்தைந்து இலட்சம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்ய நிர்வாக அனுமதி அளிக்கப்படுகிறது.

viii). இப்பணிகளுக்காக ஒப்பளிக்கப்படும் தொகையை பெற்று, தமிழ் இணையக் கல்வி கழகத்திற்கு வழங்க தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

5. மேலே பத்தி 4 (vi)–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

"2202 பொதுக் கல்வி – மொழி வளர்ச்சி – 800 ஏனைய செலவு – மாநிலச் செலவினங்கள் – AK – தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை – 333 தொழில்முறை சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் 09 ஏனைய தொகை கொடுத்தல்"

IFHRMS (த.தொ.கு. 2202 05 800 AK 33309)

6. மேலே பத்தி 4(vi)–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம், ரூ.10,40,000/– 2021–2022–ஆம் நிதி ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவித்திற்கு 2021–2022–ஆம் நிதி ஆண்டுக்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 4(vi)–இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், மேலே பத்தி 4(vi)–ல் ஒப்பளிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2021–2022–ஆம் நிதியாண்டிற்கான துணை மதிப்பீடுகளில் / திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (த.வ.(ம)செ.) துறைக்கு அனுப்பி வைக்குமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. இத்திட்டத்திற்காக பெறப்படும் தொகை உரிய திட்டத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டுமென்றும், இத்தொகைக்கான பயனீட்டுச் சான்று மற்றும் செலவின விவரங்களுடன் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கும், அரசுக்கும் அனுப்பி வைக்குமாறு தமிழ் இணையக் கல்விக் கழக இயக்குநர் அவர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

8. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.51798/ நிதி (தவ(ம)செ) / 2021, நாள் 29.11.2021–ல் பெற்ற இசைவுடனும் மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.985 (தொள்ளாயிரத்து எண்பத்து ஐந்து) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மகேசன் காசிராஜன்,
அரசு செயலாளர்.

பெறுநர்
இயக்குநர் (மு.கூ.பொ), தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8.
இயக்குநர் (மு.கூ.பொ), தமிழ் இணையக் கல்விக் கழகம், சென்னை–25.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–8.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை–9/18.
நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (நிதி (ம) ம.வ.மே) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (தொழில்துறை) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் அவர்களின்
முதன்மை தனிச் செயலர், சென்னை–9.
நிதி(தவ(ம)செ/வ.செ.பொ.I/வ.செ.பொ.II/வ.வ.I)த் துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.